# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
## (See rule 5 and Serial Number 3 of Appendix - I)
## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 2011 செப்டம்பர் திங்கள் 08.09.2011–ம் நாள் வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

**முன்னிலை:**
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்

**பொருள் எண்.1**

குளச்சல் நகராட்சியில் 2011–ம் ஆண்டு நடைபெறவிருக்கும் நகர்மன்ற உள்ளாட்சி தேர்தலுக்கான 24 வார்டுகளுக்குரிய வாக்குச்சாவடிகளின் பட்டியல் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலர் அவர்களால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஒப்புதல் வழங்கப்பட்ட வாக்குச்சாவடிகளின் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்

| வார்டு எண் | வாக்குச்சாவடி எண். | வாக்குச்சாவடியின் பெயர் |
|---|---|---|
| 1 | 1 | அரசு தொடக்கப்பள்ளி, சாஸ்தான்கரை, (பிரதான கட்டிடத்தின் தெற்கு பாகம்) |
| 2 | 2 | அரசு நடுநிலைபள்ளி, மெயின்ரோடு (நடுக்கட்டிடம்) |
| 3 | 3 | அரசு பெண்கள் தொடக்கப்பள்ளி, குளச்சல் |
| 4 | 4 (ஆ) | சுனாமி குடியிருப்பு, சமுதாயக்கூடம், குளச்சல் (வடக்கு) |
| 4 | 4 (பெ) | சுனாமி குடியிருப்பு, சமுதாயக்கூடம், குளச்சல் (தெற்கு) |
| 5 | 5 | குழந்தைகள் வளர்ச்சி திட்ட கட்டிடம், கொட்டில்பாடு. |
| 6 | 6 | குழந்தைகள் வளர்ச்சி திட்ட கட்டிடம், கொட்டில்பாடு. (நடுக்கட்டிடம்) |
| 7 | 7 | குழந்தைகள் வளர்ச்சி திட்ட கட்டிடம், கொட்டில்பாடு. (வடக்கு கட்டிடம் கிழக்கு பாகம்) |
| 8 | 8 | துறைமுக அலுவலகம், இந்திரா காலனி |
| 9 | 9 | சத்துணவு கூடம், மரமடி |
| 10 | 10 | புனித மரியன்னை தொடக்கப்பள்ளி. (தெற்கு கட்டிடம் கிழக்குப்பகுதி) |
| 11 | 11 | புனித மரியன்னை தொடக்கப்பள்ளி. (பிரதான கட்டிடம் நடுப்பக்கம்) |
| 12 | 12 | புனித மரியன்னை தொடக்கப்பள்ளி. (பிரதான கட்டிடம் மேற்கு பக்கம்) |
| 13 | 13 | புனித மரியன்னை தொடக்கப்பள்ளி. (பிரதான கட்டிடம் கீழ் மேற்கு பக்கம்) |
| 14 | 14 | புனித மரியன்னை தொடக்கப்பள்ளி. (புதிய கட்டிடம்) |

| | | |
|---|---|---|
| 15 | 15 | மீனவர் கூட்டுறவு சங்கம். (கிழக்குப்பக்கம்) |
| 16 | 16 | புனித அன்னாள் தொடக்கப்பள்ளி, களிமார். (கிழக்கு பிரதான கட்டிட வடக்கு பக்கம்) |
| 17 | 17 | புனித அன்னாள் தொடக்கப்பள்ளி, களிமார். (பிரதான கட்டிடம் தெற்கு பக்கம்) |
| 18 | 18 | புனித அன்னாள் தொடக்கப்பள்ளி, களிமார். (பிரதான கட்டிடம் தெற்கு பக்கம்) |
| 19 | 19 | புனித அன்னாள் தொடக்கப்பள்ளி, களிமார் (வடக்கு பிரதான கட்டிடத்தின் கிழக்கு பாகம்) |
| 20 | 20 | அரசு உயர்நிலைப்பள்ளி, இலப்பவிளை. (வடக்கு கட்டிடத்தின் கிழக்கு பாகம்) |
| 21 | 21 | அரசு உயர்நிலைப்பள்ளி, இலப்பவிளை. (பிரதான கட்டிடத்தின் மேற்கு பாகம்) |
| 22 | 22 | அரசு உயர்நிலைப்பள்ளி, இலப்பவிளை. (கட்டிடத்தின் கிழக்குபாகம்) |
| 23 | 23 | அரசு தொடக்கப்பள்ளி, சாஸ்தாங்கரை. (பிரதான கட்டிடத்தின் வடக்கு பாகம்) |
| 24 | 24 | புனித மரியன்னை மேல்நிலைப்பள்ளி (தெற்கு கட்டிடம்) |

மேற்படியுள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்ட பட்டியலில் வார்டு 15—க்கு வாக்குச்சாவடி மீனவர் கூட்டுறவு சங்கம், குளச்சல் என்றுள்ளது. அக்கட்டிடம் ஆய்வு செய்யப்பட்டதில் கட்டிடம் பாதுகாப்பற்ற பழுதான நிலையில் உள்ளது. எனவே வார்டு 15—க்கு வாக்குச்சாவடியாக சட்டமன்ற தொகுதி தேர்தலுக்கு பயன்படுத்தப்பட்ட புனித மரியன்னை தொடக்கப்பள்ளி நடுப்பக்கக் கட்டிடம் வாக்குச்சாவடியாக வார்டு 15—க்கு பயன்படுத்த அனுமதி வேண்டப்படுகிறது. மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அ.குறிப்பு** – 1) மாவட்ட ஆட்சித்தலைவர், நாகர்கோவில் அவர்களால் உள்ளாட்சி தேர்தல் 2011 —க்கு அங்கீகாரம் அளிக்கப்பட்ட வாக்குச்சாவடி பட்டியலை மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

2) வார்டு 15—க்காக ஒதுக்கப்பட்ட வாக்குச்சாவடி மீனவர் கூட்டுறவு சங்க கட்டிடம் பழுதடைந்துள்ளதால் புனித மரியன்னை தொடக்கப்பள்ளி (பிரதானகட்டிடம் மையப்பகுதி) கட்டிடத்தை வாக்குச்சாவடியாக பயன்படுத்த அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.அ2/3255/2011)

**தீர்மானம் எண்.1717: வார்டு எண்.4(ஆ) மற்றும் 4(பெ) ஆகிய வாக்குச்சாவடிகளை முறையே குளச்சல் வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் குளச்சல் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் ஆகிய கட்டிடங்களில் அமைக்கலாம் என்ற திருத்தத்துடன் அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 2**

திட்ட ஒருங்கிணைப்பாளர், சுனாமி மாவட்ட செயலாக்க அலகு, நாகர்கோவில் அவர்களின் மா.செ.அ.01/005/2011 நாள் 20.07.2011 கடிதத்தில் சுனாமி மறுகட்டமைப்பு திட்டத்தின்கீழ் இயற்கை இடர் பாதுகாப்பு மையங்கள் மற்றும் அவற்றிற்கு செல்லும் சாலைகள் அமைக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சுனாமி மாவட்ட செயலாக்க அலகின் வழி மேற்கொள்ளப்படவுள்ள அரசு நடுநிலைப்பள்ளி வளாகம், குளச்சலில் அமையவிருக்கும் இயற்கை இடர் மீட்பு பாதுகாப்பு மையம் வரை செல்லும் சாலை

பள்ளி நுழைவு வாயில் முதல் பாதுகாப்பு மையம் வரை 57 மீட்டர் நீளம் சிமெண்ட் தளம் அமைப்பதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அ.குறிப்பு**</u> – மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.4030/2011/இ1)

**தீர்மானம் எண்.1718 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 3**

இந்நகராட்சிக்குட்பட்ட சிங்காரவேலன் காலனியின் அருகில் இந்திரா காலனியில் நகராட்சி பகுதிகளில் சேகரிக்கப்படும் குப்பைகளை JCB மூலம் அப்புறப்படுத்துவதற்கு மதிப்பீடு ரூ.3,00,000/–க்கு 30.08.2011 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. அவை பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1. | திரு.S. லெஸ்லின் பாபு<br>எஸ்.எஸ்.ஆர். சன்ஸ்<br>மினி லாறி சர்வீஸ், ரீத்தாபுரம் | மதிப்பீடு விகிதம்<br>(ரூ.2,93,250/–) |
| 2. | திரு.S.செல்லசாமி,<br>பீச்ரோடு, குளச்சல் | 4.34% மதிப்பீட்டைவிட அதிகம்<br>(ரூ.3,06,000/– ) |

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தில் கொடுத்துள்ள திரு.S.லெஸ்லின்பாபு, ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : 1) மேற்படி பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.3,00,000/–க்கு நகர்மன்ற தீர்மான எண்.1680 நாள்.29.07.2011–ன்படி மன்றம் ஒப்புதல் வழங்கி உள்ளது.

2) மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தில் கொடுத்துள்ள திரு.S. லெஸ்லின்பாபு, ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.எச்1/3855/2011)

**தீர்மானம் எண்.1719 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பர்னட்டிவிளையிலிருந்து பாலத்தன்கரை செல்லும் சாலையில் தெற்கு நோக்கி செல்லும் தெருவில் க.எண்.2–247/6, 2–247/2, 2–247/4 ஆகிய வீடுகளில் புதிய குடிநீர் குழாய் இணைப்பு கோரி மனு செய்து உள்ளார்கள். மேற்கண்ட வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்குவதற்கு பகிர்மான குழாய் இல்லாததால் புதியதாக 2” PVC பகிர்மான குழாய் அமைப்பதற்கு மதிப்பீட்டு தொகை ரூ. 20,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு –**

மேற்படி சாலை நகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.5756/2011/இ2)

**தீர்மானம் எண்.1720 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17—க்குட்பட்ட மார்க்கெட் சாலையிலிருந்து அழகனார்கோட்டைவிளை செல்லும் தெருவிற்கு சிமென்ட் தளம் அமைப்பதற்கு உத்தேச மதிப்பீடு ரூ. 3,00,000/— தயாரிக்கப்பட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** – மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.1721 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) ஜே. ஜேசையா,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்
குளச்சல் நகராட்சி